பட்டம் பெற்ற நடத்துநர்களுக்கு பதவி உயர்வு

*2009—திரு. மா. மணிமாறன்,
திரு. மா. சுந்தரதாஸ்:
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர். கீழ்க் கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றும் நடத்துநர்கள் பட்டம் பெற்றவுடன் பதவி உயர்வு அளிக்கப்படுவது போல் மற்ற போக்குவரத்துக் கழகங்களிலும் உள்ள நடத்துநர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் நடத்துநர்கள் பட்டம் பெற்றவுடன் பதவி உயர்வு அளிக்கப்படுவதில்லை.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, பட்டம் பெற்று நடத்துநர்களாகப் பணிபுரியக்கூடியவர்களை துறையில் ஏற்படுகிற எழுத்தர் போன்ற பணிகளில் அமர்த்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, நடத்துநர்களாகப் பணிபுரியக்கூடியவர்களுக்குத் தேர்வுநிலை நடத்துநர், முதுநிலை நடத்துநர் என்ற அடிப்படையில் அவர்களுக்கென்று சில பதவி உயர்வுகள் அளிக்கப்படுகின்றன. ஆறு வருடங்கள் நடத்துநர்களாகப் பணிபுரிந்து, முதல் ஆய்வு பெற்றும், இரண்டாம் நிலையில் இருக்கும் நடத்துநர்கள் பட்டதாரியாக இருந்தால் அவர்கள் முதல் நிலையில் உள்ள இளநிலை பரிசோதகர், நேரக் காப்பாளர் போன்ற மாற்றுப் பணிகளில் அமர்த்தப்படுகிறார்கள். இப்படிப்பட்ட பதவி உயர்வுகள் தான் அவர்களுக்கு விதிதாச்சார அடிப்படையில் அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. மா. சுந்தரதாஸ்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சில புரோமோஷன்கள் பற்றிச் சொன்னார்கள். பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் இந்த நிலைமை இருந்தாலும் கூட, நேசமணி போக்குவரத்துக் கழகத்தில் 28 ஆண்டுகாலம் பணிபுரிந்து, கண்டக்டர்கள் பட்டதாரியாக இருந்தாலும் சரி, இல்லையென்றாலும் சரி, இதுவரையில் அவர்களுக்கு புரோமோஷன் கொடுக்கப்படவில்லை. அது அரசுக்குத் தெரியுமா? அதற்கு என்ன காரணம் என்றால் ட்ராபிக் மானேஜர், ட்ராபிக் இன்ஸ்பெக்டர் என்ற பதவிகள் இருந்ததை எல்லாம் எடுத்துவிட்டார்கள் ஆகவே, 28 வருடங்கள் சர்வீஸ் உள்ளவர்களுக்கு அந்தக் கழகத்தில் புரோமோஷன் வாய்ப்பு இல்லையென்றாலும் கூட, விரும்பியவர்களுக்கு திருவள்ளுவர், பட்டுக்கோட்டை அழகிரி

போன்ற போக்குவரத்துக் கழகங்களுக்கு புரோமோஷன் செய்து மாற்றுவதற்கு அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இதர கழகங்களுக்கு மாற்றுவது என்பது இயலாத காரியம். ஆனால், அந்தந்தக் கழகங்களில் ஏற்கனவே நான் குறிப்பிட்டுள்ள பொறுப்புகளுக்குப் பதவி உயர்வு நிறுத்தி வைக்கப் பட்டிருந்தால் எதிர்காலத்தில் பரிசீலிக்கப்பட்டு, அவைகளை அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தொழிலாளர்கள் நிரந்தரம்.

*3038—திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தில் 240 நாட்கள் பணிபுரிந்த தொழிலாளர்கள் நிரந்தரப்படுத்தப் படுவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இவர்களை உடனடியாக நிரந்தரமாக்க அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தில் தொடர்ந்து ஒரு வருடத்தில் 240 நாட்கள் திருப்திகரமாக பணி செய்து முடித்த ஓட்டுநர்கள் நடத்துநர்கள், தொழில் நுட்பப் பணியாளர்கள் ஆகியோர் உடனடியாகப் பணி நிரந்தரம் செய்யப்படுகிறார்கள்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தில் 240 நாட்கள் பணி புரிந்தும் அவர்கள் நிரந்தரப்படுத்தப்படாமல் இருப்பதாக பல பேர் என்னிடம் குறையாகச் சொன்னார்கள். ஆகவே தான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். அமைச்சர் அவர்கள் ஒரு வருடத்தில் 240 நாட்கள் வேலை செய்தவர்கள் நிரந்தரப்படுத்தப் படுவார்கள் என்று சொல்கிறார்கள். அப்படியென்றால், பல வருடங்கள் வேலை செய்தும் நிரந்தரப்படுத்தப்படவில்லை என்று சொல்கிறார்களே, அதற்கு அரசு என்ன கூறுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

9-20 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, 1-9-1989-வது ஆண்டு நடந்த ஊதிய ஒப்பந்தத்தில் 240 நாட்களுக்குக் குறைவு இல்லாமல் அவர்கள் பணிசெய்திருப்